(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 23-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(5) அறிக்கை அளித்தல்.

திருப்பரங்குன்றம் நிகழ்ச்சி பற்றிய அறிக்கைக்கு திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 82A-ன் கீழ் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 25-4-79 அன்று இந்தப் பேரவையில் திருப்பரங்குன்றம் நிகழ்ச்சிகள் பற்றிய ஒரு அறிக்கை விதி 42-ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது:—

''அந்த அதிகாரி விடுப்பில் இருக்கிறார். விடுப்பில் இருந்து வரும்பொழுது வேறு மாவட்டத்துக்கு மாற்றப்படுவார் என்று அரசு ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.''

இந்த வாசகங்களுக்குப் பதிலாக 27-3-79 அன்று மாண்புமிகு அவை முன்னவர் அவையில் கூறிய வாசகங்கள் அவைக் குறிப்பேட்டில் உள்ளபடி, அதாவது கீழ்க்கண்ட வாசகங்களை,

''அந்த அதிகாரி விடுமுறையிலே இருக்கிறார். அந்த விடுமுறைக்குப் பிறகு அந்த நேரத்திலே எழுகின்ற நிலைமைகளையொட்டி மாற்றப்பட வேண்டுமென்ற சூழ்நிலை எழுமானால் நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்'' என்று இந்த மன்றத்தில் ஏற்கெனவே அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர் என்று சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.